# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -1)

Annual Status of Education Report
असर ASER 2016 RURAL
Facilitated by PRATHAM

## கதை

தேவி ஒரு அழகான நாய் குட்டியை தெருவில் பார்த்தாள். அதற்கு ராமு என்று பெயர் வைத்தாள். அதை வீட்டிற்குக் கொண்டு வந்தாள். ராமுவை மறைத்து வைத்தாள். அம்மா அவளுக்குக் குடிக்க பால் கொடுத்தார். அதை தேவி ராமுவுக்குக் கொடுத்தாள். பாலைக் குடித்து விட்டு ராமு குரைக்க ஆரம்பித்தது. அதைக் கேட்ட அம்மா அறைக்குள் சென்றார். ராமுவைப் பார்த்தவுடன் அம்மாவிற்கு கோபம் வந்தது. ஆனால் ராமு அம்மாவின் காலை சுற்றி வந்தது. அம்மாவின் கோபம் தணிந்தது. அம்மாவிற்கும் ராமுவை பிடித்துப் போனது.

## பத்தி

செடியில் அழகான பூ பூத்தது.
தேனி ஒன்று அங்கே வந்தது.
பூவில் உள்ள தேனைக் குடித்தது.
பறந்து சென்றது.

## பத்தி

ஒரு பூனை எலியைத் துரத்தியது.
எலி மிக வேகமாக ஓடியது.
சிறிய ஓட்டைக்குள் சென்றது.
பூனை ஏமாந்து விட்டது.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -1)

Annual Status of Education Report
असर ASER 2016 RURAL
Facilitated by PRATHAM

## எழுத்து

ஈ ள ம்

உ த

அ ரு ய

ட ந

மேலே உள்ள ஏதேனும் 5 எழுத்துக்களைக் கேட்க வேண்டும். அதில் 4 எழுத்துக்களைச் சரியாக சொல்ல வேண்டும்.

## வார்த்தை

தேன் மாடு

கல்

படி மண்

கடை தலை

பால்

காது நரி

மேலே உள்ள ஏதேனும் 5 வார்த்தைகளைக் கேட்க வேண்டும். அதில் 4 வார்த்தைகளைச் சரியாக சொல்ல வேண்டும்.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -2)

## கதை

சீதாவிடம் ஒரு சீப்பு இருந்தது. தினமும் தலைவாரிய பின் அதை தன் பைக்குள் வைத்துக் கொள்வாள். ஒரு நாள் தலைவார சீப்பை எடுத்தாள். அதைக் கட்டில் மேலே வைத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு சீப்பைத் தேடினாள். சீப்பு அங்கு இல்லை. பெட்டிக்குள் பார்த்தாள். எங்கு தேடியும் சீப்பு கிடைக்கவில்லை. சீப்பு எங்கு போனது என்று யோசித்தாள். அப்போது ஒரு பூனை அங்கு வந்தது. பூனையின் வாயில் சீப்பு இருந்தது. சீதாவைப் பார்த்த பூனை, அதை தரையில் போட்டுச் சென்றது. சீதாவிற்கு தன் சீப்பு கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி.

## பத்தி

புலிக்கு மிகவும் பசியாக இருந்தது. மரத்தின் உயரத்தில் ஒரு பூனையைப் பார்த்தது. உடனே மரத்தில் ஏறியது. கால் தவறி கீழே விழுந்தது.

## பத்தி

ராணி ஒரு பூச்செடி நட்டாள். அதற்கு தினமும் தண்ணீர் ஊற்றினாள். அது நன்றாக வளர்ந்தது. அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -2)

## எழுத்து

இ க் சு

ம ல

அ ன ட

ள ர

மேலே உள்ள ஏதேனும் 5 எழுத்துக்களைக் கேட்க வேண்டும். அதில் 4 எழுத்துக்களைச் சரியாக சொல்ல வேண்டும்.

## வார்த்தை

விடை பல்

மீன்

புகை இலை

கண் சாவி

ஆறு

செடி பாடு

மேலே உள்ள ஏதேனும் 5 வார்த்தைகளைக் கேட்க வேண்டும். அதில் 4 வார்த்தைகளைச் சரியாக சொல்ல வேண்டும்.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -3)

Annual Status of Education Report
असर ASER 2016 RURAL
Facilitated by PRATHAM

## கதை

ஒரு ஊரில் ஒரு ஏழை விவசாயி இருந்தார். அவரிடம் ஒரே ஒரு பானை இருந்தது. அதில் அவர் தினமும் வீட்டிற்கு தண்ணீர் கொண்டு வருவார். ஒருநாள் அந்த பானையில் ஒரு ஓட்டை விழுந்து விட்டது. என்ன செய்வது என்று யோசித்தார். அவர் தண்ணீர் கொண்டு வரும் பாதையில் பூ விதைகளை விதைத்தார். அந்த ஓட்டை பானையிலிருந்து ஒழுகிய நீரினால் அந்த விதைகள் செடிகளாக வளர்ந்தன. அழகான பூக்கள் மலர்ந்தன.

## பத்தி

ஒரு புலி மானைத் துரத்தியது.
மான் வேகமாக ஓடியது.
குகைக்குள் ஓடி மறைந்தது.
புலி ஏமாந்து போனது.

## பத்தி

நான் மாமா வீட்டிற்குச் சென்றேன்.
அங்கே அத்தை பாயாசம் செய்தார்.
மாமா வடை சுட்டார்.
அனைவரும் சேர்ந்து சாப்பிட்டோம்.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -3)

## எழுத்து

சே உ ஏ

ஐ ய

கு த் ந

ட ரா

மேலே உள்ள ஏதேனும் 5 எழுத்துக்களைக் கேட்க வேண்டும். அதில் 4 எழுத்துக்களைச் சரியாக சொல்ல வேண்டும்.

## வார்த்தை

கல் ஊர்

கால்

மலை மாடு

எண் நாய்

நரி

மண் ஏணி

மேலே உள்ள ஏதேனும் 5 வார்த்தைகளைக் கேட்க வேண்டும். அதில் 4 வார்த்தைகளைச் சரியாக சொல்ல வேண்டும்.

# வாசித்தல் திறனாய்வு (மாதிரி -4)

Annual Status of Education Report
असर ASER 2016 RURAL
Facilitated by PRATHAM

## கதை

ஒரு கிராமத்தில் ரவியின் வீடு இருந்தது. அவன் வீட்டின் பின்புறம் அழகிய தோட்டம் இருந்தது. தோட்டத்தில் நிறைய செடிகள் இருந்தன. அவனுக்குத் தோட்டத்தில் விளையாட மிகவும் பிடிக்கும். ஒரு நாள் மாலை, தோட்டத்தில் விளையாடச் சென்றான். அங்கே ஒரு நத்தை இருந்தது. அவன் அதன் பக்கத்தில் சென்றான். அதை விரல்களால் தொட்டான். உடனே நத்தை வேகமாகத் தன் தலையைக் கூட்டிற்குள் இழுத்தது. அதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். தினமும் வந்து அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவான்.

## பத்தி

தட்டில் வெல்லம் இருந்தது.
ஒரு எறும்பு அதைப் பார்த்தது.
தன் நண்பர்களை அழைத்தது.
சிறிது நேரத்தில் வெல்லம் தீர்ந்தது

## பத்தி

யானைக்குத் தாகமாக இருந்தது.
தண்ணீர் தேடி அலைந்தது.
காட்டில் குளம் ஒன்றைக் கண்டது.
தண்ணீர் குடித்து விட்டு வீடு திரும்பியது.

Annual Status of Education Report
असर ASER 2016 RURAL
Facilitated by PRATHAM

# வாசித்தல் திதிறனாய்வு (மாதிரி -4)

## எழுத்து

ம அ ல

ஒ ய

ட ள ம்

க எ

மேலே உள்ள ஏதேனும் 5 எழுத்துக்களைக் கேட்க வேண்டும். அதில் 4 எழுத்துக்களைச் சரியாக சொல்ல வேண்டும்.

## வார்த்தை

காது வடை

புலி

மலை குடி

தரை எலி

பால்

யானை மாடு

மேலே உள்ள ஏதேனும் 5 வார்த்தைகளைக் கேட்க வேண்டும். அதில் 4 வார்த்தைகளைச் சரியாக சொல்ல வேண்டும்.